தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தை 10, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

2007 ஜனவரி 24, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை யுடைய செயல்"

அரிய செயல்களை அவற்றுக்கு உரிய முறையான வழியில் செய்து முடிக்கும் திறமையுடையவர்கள் பெருமைக்குரியவராவார்கள். *(குறுக்கீடுகள்)*

1. அறிவிப்பு

வினா-விடை நேரத்தில் வேறு பொருள் எழுப்ப அனுமதி மறுத்தல்

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றுகொண்டு கோஷமிட்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைதியாக உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்யக் கூடாது. விதி எண் 32-இன்படி, முதலில் Question hour தான். *(குறுக்கீடுகள்)* அதற்கு முன்னால் எதையும் எடுக்க முடியாது. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், முதலில். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், முதலில். எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* முதலில் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)* எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்று கொண்டு தொடர்ந்து கோஷமிட்டனர்.)

நீங்கள் அவை நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருக்கின்றீர்கள். *(குறுக்கீடுகள்)* திரும்பத் திரும்ப எச்சரிக்கையாகச் சொல்கின்றேன்,

உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன, எதிர்க்கட்சித் துணைத் தலைவர், எல்லோரிடமும் சொல்லி உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள் போங்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டே அவையிலிருந்து வெளியேறினர்.)

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் அவையிலிருந்து வெளியேறினர்.)

பேரவைக்கு ஓர் அறிவிப்பு. விதி எண் 32–இன்படி, 'The first hour of every sitting shall unless the House unanimously resolves otherwise be available for the asking and answering of questions. The Speaker may in his discretion extend the time for questions.'

So, முதலில் இருக்கக்கூடியது கேள்வி–பதில்தான். அதற்கு முன்னால் எதையும் எழுப்ப முடியாது. இது குறித்து 1980–84 – பேரவையில் – ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது, "வினா–விடைகளுக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தில், அவற்றிற்குப் புறம்பான வேறு எதையும் அனுமதிப்பதற்கில்லை" என்று. ஏற்கெனவே, 1983–ல் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இன்று, எதிர்க்கட்சியினரின் நடவடிக்கைகள் எல்லாம் அவை மரபிற்கு மீறிய செயல்; அவையினுடைய விதிகளுக்கு மீறிய செயல் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. வினாக்கள்–விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள். வினா எண் 21, 22 மற்றும் 23 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எல். இளவழகன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

24—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***5355—திரு. கே.எல். இளவழகன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—